E-Mail 24.8.18 6.40PM

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள்,
சென்னை – 600 006.

ந. க. எண். 2787/ ஈ1 / 2018, நாள் 23 .08.2018

பொருள் : தேசிய மக்கள் தொகைக் கல்வி– பள்ளிகளில் போஸ்டர் தயாரித்தல் போட்டி– நடத்துதல்– சார்பு.

... ... ...

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுடெல்லியிலுள்ள தேசிய ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு உதவி பெறும் பள்ளிகள், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகள் நீங்கலாக) 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு போஸ்டர் தயாரித்தல் போட்டியினை மக்கள் தொகைக் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்போட்டியினை செவ்வனே நடத்த, மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோருடன் போட்டி நடத்துதல் சார்ந்து விரிவாகக் கலந்துரையாடி, தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரைத் தொடர்பு கொண்டு, இயக்குநரின் இந்த செயல்முறைகள் ஒவ்வொரு பள்ளிக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு (**Forward**) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அந்தந்த மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் இப்போட்டியினை தொய்வின்றி நடத்துவதற்காக ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். இப்போட்டியினை நடத்துவதற்காக கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு அனைத்து முதல்வர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. பள்ளி அளவில் இப்போட்டி 03.09.2018 அன்று நடத்தப்பட வேண்டும்.
2. இணைப்பு–1 இல் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பில் அரை சார்ட் தாளில் போஸ்டர்கள் தயாரிக்க வேண்டும்.
3. மாணவர்கள் தங்களுக்குத் தேவையான சார்ட் தாள், கலர் பென்சில்கள் / க்ரையான்கள் / Oil / acrylic / water colour போன்றவற்றை தாங்களே கொண்டு வருதல் வேண்டும்.

4. பள்ளிகளில் போஸ்டரை தயாரிக்க மாணவர்களுக்கு அதிகபட்சமாக 2 மணி நேரம் வழங்கலாம்.

5. பள்ளி அளவில் தலைமை ஆசிரியர் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் நடுவர்களாக செயல்பட்டு இணைப்பு–2இல் கொடுக்கப்பட்ட மதிப்பெண் பகிர்வின்படி, போஸ்டர்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

6. பள்ளி அளவில் மிகச் சிறந்த போஸ்டர் ஒன்றினை அந்தந்த மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் 05.09.2018–க்குள் தபால் மூலமாகவோ, தனிநபர் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஒவ்வொரு போஸ்டரிலும் மாணவரின் பெயர், பள்ளியின் முழு முகவரி, பள்ளியின் அலுவலக முத்திரை, தலைமை ஆசிரியரின் கையொப்பம் மற்றும் முத்திரை ஆகியவை இடம் பெற வேண்டும். (இவை புதுடெல்லியின் உள்ள NCERTக்கு அனுப்பப்பட உள்ளதால், இவை ஆங்கிலத்தில் இருத்தல் வேண்டும்)

8. ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரும், தங்கள் மாவட்டத்தில் பெறப்பட்ட போஸ்டர்களில், முதல் மூன்று இடங்களைப் பெறும் போஸ்டர்களை 06.09.2018 அன்று தெரிவு செய்து, உடனடியாக நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

9. மாவட்ட அளவில் போஸ்டர்களைத் தெரிவு செய்ய, மக்கள் தொகைக் கல்வி / வளரிளம் பருவக் கல்வியில் அனுபவம் உள்ளவர் ஒருவரும், கல்வியாளர் ஒருவரும், கலையில் ஈடுபாடு உடையவர் ஒருவரும் நடுவர்களாக நியமிக்க வேண்டும். இணைப்பு–2இல் அளிக்கப்பட்ட மதிப்பெண் பகிர்வின்படி தேர்வு செய்தல் வேண்டும்.

10. நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், அனைத்து மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட போஸ்டர்களில், மிகச் சிறந்த பத்து போஸ்டர்களை 25.09.2018 அன்று தெரிவு செய்ய வேண்டும். மாநில அளவில் போஸ்டர்களை தெரிவு செய்தலுக்கும் (வ. எண். 9–ல் குறிப்பிட்டுள்ளபடி) நடுவர்களை நியமிக்க வேண்டும்.

11. இப்போட்டியினை நடத்த செலவின விவரம் இணைப்பு–3இல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல்வர்கள், அனுப்பப்பட்ட நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொண்டு, இரசீதுகளை உடனடியாக இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

12. மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ. 700/– ரூ. 500/– ரூ. 300/– மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற 7 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படும். இவை தேசிய அளவில் தெரிவு செய்யப்படுவதற்காக புதுடெல்லியிலுள்ள NCERT–க்கு அனுப்பி வைக்கப்படும்.

13. தேசிய அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ. 1000/– ரூ. 700/– ரூ. 500/– மற்றும் சான்றிதழ்கள் NCERT ஆல் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற 7 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படும்.

இப்போட்டியில் அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களும் பங்கேற்க ஊக்கப்படுத்தும்படியும், போட்டியினை சிறப்பாக நடத்தும்படியும் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும், முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

நகல்

இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம் ,
சென்னை–6 – மேல் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு – 1

போஸ்டர் தயாரித்தல் போட்டிக்கான தலைப்புகள்

| | |
|---|---|
| சீரானவளர்ச்சி (Sustainable Development) | 1. உலக வெப்ப மயமாதல்<br>2. மனித வளத்தை பயன்படுத்துதலின் முறையும் தொழில் நுட்பமும் – தொடர்புகள்.<br>3. என் பூமித்தாயை எவ்வாறு மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும்?<br>4. திட்டமிட்ட நகரமயமாதலின் அவசியம். |
| வளரிளம் பருவக் கல்வி | (அ) வளர்ச்சி<br>1. வாழ்க்கை விலை மதிப்பில்லாதது. அதனைப் போற்று<br>2. நீ தனித்தன்மையுடையவன்: உன்னை அறிந்து கொள்.<br>3. நான் என்னைக் குறித்து பெருமையடைகிறேன்<br>4. முறையான சரிவிகித உணவூட்டம் : ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாதது<br>5. பாலங்களை உருவாக்குவோம்! சுவர்களை அல்ல!<br>6. ஏமாற்றும் மனிதத் தொடர்புகளை வேண்டாமென உதறுவோம்<br>7. நல்லுறவிற்கு மிக முக்கியமானவை பரஸ்பர மரியாதை மற்றும் சமத்துவம்<br>8. இளவயது திருமணம் இயல்பான வளர்ச்சிக்குத் தடை<br>(ஆ) **HIV / AIDS**<br>1. இரத்த தானம் செய்து, உறவுகளை மேம்படுத்துவோம்.<br>2. HIVயினால் பாதிக்கப்பட்டவருக்கு தேவை தன்னிலையில் வைத்துப் பார்த்தல் மட்டுமே'! பரிதாபம் அல்ல'!.<br>3. HIV மற்றும் AIDS பற்றிய மாயைகளும், தவறான எண்ணங்களும்<br>4. HIV தொற்றிலிருந்து எவ்வாறு தன்னை பாதுகாத்து கொள்ளலாம்.<br>போதைக்கு அடிமையாதல்:<br>1. போதைக்கு அடிமையாதலின் காரணங்களும் விளைவுகளும்<br>2. போதை பொருளை மறுப்போம்: பிறருக்கு முன்னுதாரணமாக வாழ்வோம்.<br>3. ஒத்த வயதினரின் தாக்கம்: வரமா அல்லது சாபமா |
| குடும்பம் | 1. தனிக்குடும்பம் மற்றும் கூட்டுக்குடும்பங்களின் பயன்கள்.<br>2. வயதானவர்களை பேணி பாதுகாத்தல்<br>3. பெற்றோரின் பங்கு : வீட்டு வேலைகளில் தாய், தந்தை இருவரும் பங்கெடுத்தல். |

| | |
|---|---|
| ஆண் பெண் சமநிலை மற்றும் சமத்துவம் | 1. மக்கள் தொகை சமநிலை அடைதலுக்கு பெண்கள் வலிமை பெறுதலே அடிப்படை<br>2. பெண் குழந்தையின் விருப்பங்கள்<br>3. பெண் குழந்தையை பாதுகாப்போம்<br>4. பெண்கள் மதிக்கும் ஆண்களை மதிப்போம்<br>5. பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான கொடுஞ்செயல்களை வீட்டிலும், வீட்டிற்கு வெளியிலும் தடுப்போம். |

இணைப்பு – 2

மதிப்பெண்:

| வ. எண். | விவரம் | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | கொடுக்கப்பட்ட தலைப்பினை படம் மூலம் வெளிப்படுத்துதல், | 30 |
| 2. | போஸ்டர் தயாரித்த முறை (வண்ணங்களை முறையாக பயன்படுத்துதல்) | 30 |
| 3. | வாழ்வியல் திறன்களை வெளிப்படுத்துதல் | 40 |
| | மொத்தம் | 100 |